**செய்தி வெளியீடு எண்: 612** **நாள்: 03.09.2018**

## இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, சென்னை—106

## அறிவிக்கை

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறையில் அரசு மற்றும் சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் (அரசு ஒதுக்கீடு இடங்கள்: 6 அரசு இந்திய முறை மருத்துவக் கல்லூரிகளில் 396 இடங்களும், 23 சுயநிதி கல்லூரிகளில் 916 இடங்களும் ஆகும் எண்ணிக்கைகள் மாறுதலுக்கு உட்பட்டது) 2018—2019 ஆம் ஆண்டிற்கு ஒற்றை சாளர முறையில் **பி.எஸ்.எம்.எஸ். / பி.ஏ.எம்.எஸ். / பி.என்.ஓய்.எஸ். / பி.யு.எம்.எஸ். / பி.எச்.எம்.எஸ்.** பட்டப்படிப்பில் சேர்வதற்கான விண்ணப்பங்கள் 6 அரசு இந்திய முறை மருத்துவக் கல்லூரிகளில் சென்ற 14.08.2018 அன்று முதல் விநியோகிக்கப்பட்டு வருகிறது. விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் தொகுப்பினை 05.09.2018 வரை சென்னை, பாளையங்கோட்டை, திருமங்கலம் மற்றும் கோட்டார் அரசு இந்திய முறை மருத்துவக்கல்லூரி முதல்வர்களிடமிருந்து அலுவலக வேலை நாட்களில் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம். பொது பிரிவு விண்ணப்பக் கட்டணம் ரூ.500/— மற்றும் சிறப்பு பிரிவு விண்ணப்பக் கட்டணம் ரூ.100/—. விண்ணப்பங்கள் கடைசி நாளான 05.09.2018 மாலை 3.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தேர்வு குழுவிற்கு கடைசி நாளான 05.09.2018 மாலை 5.30 மணிக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். தாமதமாகப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. இதுகுறித்து எந்த தகவலும் தனியருக்கு தெரிவிக்கப்படமாட்டாது. இதர விவரங்களுக்கு இணையதள முகவரி: www.tnhealth.org. பார்க்கவும். மேலும் விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் தொகுப்பினை எங்களது இணையதள முகவரியிலிருந்தும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**